Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, FEBRUARY 05, 2024

திங்கட்கிழமை பெப்ரவரி 05, 2024 | ஒளி: 09 கதிர் 186 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஒரு இலட்சம் ரூபாய் தண்டம்



தரமற்ற மருந்துகளை வழங்குதல் அல்லது விற்பனை செய்த குற்றத்திற்காக இதுவரையிலும் அறவிடப்பட்ட 100 ரூபாய் தண்டத்தை ஒரு இலட்சம் ரூபாய் வரையிலும்

தொடர்ச்சி P2



### வடக்கு, கிழக்கில்

# கரிநாள்

### பல்கலைக்கழக மாணவர்கள் ஐவர் கைது

நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி, வடக்கு, கிழக்கில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது, பொலிஸார், கண்ணீர்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்து கலைத்துள்ளனர்.

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி தமிழர்களின் கரிநாள் என பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

தொடர்ச்சி P2



### 76ஆவது சுதந்திர தினம்

# காலி முகத்திடலில் கோலாகலம்

### தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது

### இம்முறையும் ஜனாதிபதி உரையாற்றவில்லை

நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், காலி முகத்திடலில், ஞாயிற்றுக்கிழமை (04) காலை வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த வைபத்தில், பிரதம அதிதியாக வந்திருந்த தாய்லாந்து பிரதமர் ஷ்ரேத்தா தவீசின் பங்கேற்றிருந்தார்.

அழைக்கப்பட்ட அதிதிகள் தங்களுடைய ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்ததன் பின்னர், விசேட அதிதிகள் பிரதான மேடைக்கு அழைத்துவரப்பட்டனர். முப்படைகளின் தளபதிகள் வந்தடைந்தன் பின்னர் பிரதமர் தினேஷ் குணவர்தன வருகைதந்தார். அதனையடுத்து மோட்டார் படையணி, குதிரைப்படை சகிதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது பாரியார் பேராசிரியை மைத்திரியுடன் வருகைதந்தார்.

தொடர்ச்சி P2



## சுதந்திர தினம் சோபிக்கவில்லை

■ ஏ.எம்.ஜலீல்

நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவம், கொழும்பு, காலி முகத்திடலில் முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது. அத்துடன், நாடளாவிய ரீதியிலும் கொண்டாடப்பட்டன. கடந்த முறைகளைப்போல, இம்முறை சுதந்திர தினம் சோபிக்கவில்லை. தேசியக்கொடிகள் விற்பனையில் வீழ்ச்சியும் காணப்படுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். பிரதேசங்களிலுள்ள கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள் வாகனங்களில் தேசியக்கொடிகளைக் காணமுடியாவில்லை.

தொடர்ச்சி P2



## செந்தில் தலைமையில் கிழக்கில் சுதந்திரதினம்

இலங்கையின் 76ஆவது தேசிய சுதந்திர தின நிகழ்வுகள், கிழக்கு மாகாணத்தின் ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் பிரமாண்டமாக நடைபெற்றது.

தொடர்ச்சி P2

## "ஆமை முயல் சட்டம் வருகிறது"



அதிவேக நெடுஞ்சாலையில் குறைந்தபட்ச வேகத்தை விட குறைவான வேகத்தில் வாகனம் ஓட்டும் ஓட்டுனர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்தவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு முடிவு செய்துள்ளது. அதிவேக நெடுஞ்சாலைகளில் பதிவாகும் பெரும்பாலான

தொடர்ச்சி P2



## தேசத்தின் பிதாவுக்கு மரியாதை செலுத்தினர்

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் உள்ள முதலாவது பிரதமரான மறைந்த பிரதமர் டி.எஸ்.சேனாநாயக்கவின் சிலைக்கு 76ஆவது சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியன்று மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன, கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன, முன்னாள் அமைச்சர் ஹேமகுமார நாணயக்கார ஆகியோர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

(பிரதீப் பத்திரண)



## பொன்சேகாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ள எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச, தன்னையும் தனது கட்சியையும் விமர்சிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என்றார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் (ஓய்வுபெற்ற) தயா ரத்நாயக்கவை, ஐக்கிய மக்கள் சக்தியின் மூத்த ஆலோசகராக நியமிக்க சஜித் பிரேமதாச எடுத்த தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர் பொன்சேகா சில நாட்களுக்கு முன்னர் விமர்சித்திருந்தார். அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் வகையிலேயே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். வார இறுதியில் காலியில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## "அப்பாவி மக்களுக்கு செய்ததன் விளைவுகளை அனுபவிக்கின்றார்"

### சிறைச்சாலை வைத்தியசாலையில் கெஹலிய

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மக்களுக்கு செய்ததன் விளைவுகளை அனுபவித்து வருவதாக இலங்கை தொழிலாளர் மக்கள் முன்னணியின் தலைவர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை



உயர்நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களில் ஒன்பது விடயங்கள் உள்ளீர்க்கப்படாது நிகழ்நிலை சட்டத்தினை சான்றுரைப்படுத்திய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# காலி முகத்திடலில் கோலாகலம்

ஜனாதிபதியின் வருகை அறிவிக்கப்பட்டதன் பின்னர், பிரதான மேடைக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை முப்படைகளின் தளபதிகள் அழைத்துவந்தனர். அவருக்கு 21 மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதன்பின்னர், தமிழ்,சிங்களம் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் அடங்கிய குழு தேசியகீதம் இசைக்கத் தேசியக் கொடியை ஏற்றினார். அதன்பின்னர் ஜயமங்கள கீதமும் இசைக்கப்பட்டது.

கடந்த வருடத்தைப் போலவே தேசிய தின உரையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் இம்முறையை ஆற்றவில்லை. எனினும், புதன்கிழமையன்று (07) பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் ஆரம்பித்து வைக்கப்படவிருப்பதால், சுதந்திர தின உரை இடம்பெறவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்பின்னர், முப்படைகளின் அணிவகுப்பு இடம்பெற்றன. அதில்,டிரோன் படையும் இணைத்துக்கொள்ளப்பட்டமை விசேட அம்சங்களில் ஒன்றாகும். அத்துடன், பராசூட் வீரர்களின் சாகசங்களும் இடம்பெற்றன. இறுதியில் மூவினங்களைச் சேர்ந்தவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதில், மேலதேய நடனமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மூவின மாணவர்களால் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, சுதந்திர தினத்தின் பிரதான நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. இறுதியில் அந்த மூவின மாணவர்களால் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டு, பிரதான நிகழ்வு நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது.

# ஒரு இலட்சம் ரூபாய் தண்டம்

அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

ஒரு குறிப்பிட்ட மருந்தை அதன் தரத்தைக் குறைக்கும் வகையில் கலந்து, அந்த மருந்தை மருந்தகத்தில் இருந்து தெரிந்தே வெளியிட்ட குற்றத்துக்கான இதுவரையிலும் 100 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்த அமைச்சரவைப் பத்திரத்தை நீதியமைச்சரான ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ, அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார்.

# செந்தில் தலைமையில் கிழக்கில் சுதந்திரதினம்

இலங்கையில் வாழும் நான்கு தேசிய இனத்தவரின் வரவேற்பும் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அளிக்கப்பட்டதுடன், பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புகளும் இடம்பெற்றன. பேண்ட் வாத்தியங்கள், கலை, கலாச்சார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

சுதந்திர நிகழ்வின் சிறப்பு விருந்தினராக இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் அப்துல்லா கலந்துகொண்டதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படையினர்,பிரதம செயலாளர், அரசாங்க அதிபர்கள்,அமைச்சின் செயலாளர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# சுதந்திர தினம் சோபிக்கவில்லை

அரச மற்றும் குறிப்பிட்ட தனியார் மற்றும் வணக்க ஸ்தலங்களில் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு, அரசியல் மற்றும் நடப்பு விவகாரங்களில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி நிலைமை ஆகிய காரணங்களால் இவ்வருட சுதந்திர தினத்தை மக்கள் பொருட்டாகக் கொள்ளவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது

எனினும், சுதந்திர தின நாளன்று சில பகுதிகளில் சிரமதானப் பணிகள் அடிக்கல் நடும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# "அப்பாவி மக்களுக்கு செய்ததன் விளைவுகளை அனுபவிக்கின்றார்"

ஹட்டனில் உள்ள தனியார் ஹோட்டலில் ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சமீர பெரேரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஒரு மனிதன் கஷ்டத்தில் இருக்கும்போது சிரிக்கும் தேசம் அல்ல நாம், விதைத்த விதையின் பலனை அறுவடை செய்கிறோம்" என்றார்

கெஹலிய ரம்புக்வெல்ல தற்போது சுகயீனமுற்றோ அல்லது இல்லாமலோ வைத்தியசாலையில் இருக்கின்றார், வைத்தியசாலைக்குச் செல்பவர்களில் ஒரு சிலரே மீண்டு வருவார்கள் என சிரித்துக்கொண்டே கூறியவர்தான் கெஹலிய ரம்புக்வெல.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வரலாமா வேண்டாமா என்பதை நீங்களே சிந்தியுங்கள். வைத்தியசாலைக்குச் செல்லும் அனைவரும் வெளியே வருவதில்லை என்று நீங்கள்தான் சொன்னீர்கள். அதனால்தான், வைத்தியசாலைகளுக்கு முன்பாக மலர்சாலைகள் உள்ளன என்றும் சொன்னீர்கள் என்றும் சமீர பெரேரா ஞாபகப்படுத்தினார்.

நஞ்சூட்டி, மருந்துகளை இல்லாமற் செய்தமையால் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை வைத்தியசாலைகளில் இருந்தால், அவர்களும் வைத்தியசாலைக்கு முன்பாக மலர்ச்சாலைகள் உள்ளன என்பார்கள்.

கொஞ்சம் கூட மருந்து இல்லாமல், ஒரு ஜோடி செருப்பு வாங்க முடியாது பலரும் நாட்டில், வாழ்கின்றனர் எனினும் கோடிக்கணக்கில் செலவழித்து, காலி முகத்திடலில் நாடகம் ஆடுகின்றனர்.

விக்ரமசிங்க? ராஜபக்ஷ குடும்பம் மகிழ்ச்சியில் உள்ளன. நான்கு மணித்தியாலங்களுக்குக் கோடிக்கணக்கில் செலவு செய்து மக்களின் சுதந்திரத்தைக் கொண்டாடுகிறார்களா? இல்லை, அவர்கள் தங்கள் சுதந்திரத்தைக் கொண்டாடுகிறார்கள் என்றார்.

தரமற்ற இம்யுனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகளைக் கொள்வனவு செய்து அவற்றை மருத்துவ விநியோகப் பிரிவுக்கு வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட விவகாரத்தில் முன்னாள் சுகாதார அமைச்சரும் இந்நாள் சுற்றாடல் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவை, குற்றப்புலனாய்வு பிரிவினர் வெள்ளிக்கிழமை (02)கைது செய்தனர்.

ஒன்பது மணிநேர விசாரணைகளின் பின்னர், மாளிகாகந்த நீதவான் முன்னிலையில், சனிக்கிழமை (03) ஆஜர்படுத்தியபோது அவரை, எதிர்வரும் 15ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

அதனையடுத்து சிறைச்சாலை வாகனத்தில் அவர் ஏற்றப்பட்டார். சிறைச்சாலைக்குச் செல்லும் வழியில் தீடிரென சுகயீனம் ஏற்பட்டமையால், சிறைச்சாலை வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பொன்சேகாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

"யாருக்கு நான் கட்சி உறுப்புரிமை வழங்க வேண்டும் என்று யாரும் எனக்கு அலைபேசி அழைப்பை எடுத்துச் சொல்ல வேண்டாம். எனக்கு அறிவுரை கூற முயல்பவர்களைப் புறக்கணிப்பேன். கட்சியை விமர்சிப்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் துணிச்சலான முடிவுகளை எடுக்கத் தயங்கமாட்டேன்" என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

"கட்சியைப் பாதுகாப்பதும், எதிர்காலத் தேர்தல்களில் அது வெற்றிபெறுவதைப் பார்ப்பதும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களின் கடமையாகும். அந்தக் கடமையைச் செய்ய முடியாதவர்கள் வெளியேற வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

"சிலர் என் தந்தைக்கும் எனக்கும் இடையே ஒற்றுமையை வரைய முயற்சிக்கிறார்கள். இருப்பினும், நான் என் தந்தையின் வளர்ச்சி மாதிரியை மட்டுமே ஏற்றுக்கொள்கிறேன். அதனால், எனக்கும் என் தந்தைக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன," என்றும் அவர் கூறினார்.

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

நிகழ்நிலைச் சட்டமூலம் மீதான விவாதம் கடந்த மாதம் 23,24ஆம் திகதிகளில் நடைபெற்ற திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. எனினும், குறித்த சட்டமூலத்தில் உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் 13 உள்ளடக்கப்படவில்லை என்பதோடு ஏனையவை பற்றி ஆராய்வதற்கு அரசாங்கம் கால அவகாசத்தினை வழங்காது அவசர அவசரமாக சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.

அதனையடுத்து, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பாராளுமன்றக்குழு ஆகிய தரப்பினர் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஆராய்வார்கள் என்றும் அறிவித்தார். எனினும், கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் சபாநாயகர் நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார்.

குறித்த சட்டத்தின் உள்ளடக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலைச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை ஆராய்ந்தே அதனை சான்றுரைப்படுத்துவதாக அறிவித்திருந்தார். இந்நிலையில் நாம் சான்றுரைப்படுத்துவதற்கு முன்னதாக எமக்கும் அதன் உள்ளடக்கத்தினை பகிருமாறு கோரியிருந்தோம். எனினும் அவர் அதனைப் பகிர்ந்திருக்கவில்லை.

இதேநேரம், சட்டம் சான்றுரைப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கத்தையும் உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த விடயங்களை மையப்படுத்தி ஒப்பிட்டுப்பார்த்த பொது ஒன்பது விடயங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

> **இதுதொடர்பிலான பேச்சுக்களை நாம் எதிரணிகளுக்குள் முன்னெடுத்து வருகின்றோம். இந்தப் பிரேரணை ஊடாக சபாநாயகரின் செயற்பாட்டை அம்பலப்படுத்துவோம்**

உயர்நீதிமன்றம் சட்டமூலமொன்று தொடர்பில் பரிந்துரைகளைச் செய்கின்றபோது அதனை உள்ளீர்த்தே நிறைவேற்ற வேண்டும் என்பது அரசியலமைப்பின் உறுப்புரை 123(4)இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், அதற்கு அடுத்தபடியாக, சபாநாயகர் சான்றுரைப்படுத்திய பின்னர் அதனை சவாலுக்கு உட்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன.

எனினும் நாம் அந்த விடயத்தினை சட்ட ரீதியாக கையாள்வது தொடர்பில் ஆராய்கின்றோம்.

எனினும், சபாநாயகர் நிகழ்நிலைச் சட்டத்தினை சான்றுரை வழங்கிய செயற்பாட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதற்கு உள்ளோம்.

இதுதொடர்பிலான பேச்சுக்களை நாம் எதிரணிகளுக்குள் முன்னெடுத்து வருகின்றோம்.

இந்தப் பிரேரணை ஊடாக சபாநாயகரின் செயற்பாட்டை அம்பலப்படுத்துவோம் என்றார்.

# "ஆமை முயல் சட்டம் வருகிறது"

விபத்துகளுக்கு ஓட்டுனர்கள் குறைந்த வேகத்தில் வாகனம் ஓட்டுவதாலேயே ஏற்படுவதாக அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிவேகமாக வாகனம் செலுத்துவது தொடர்பில் புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தப் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தீர்மானித்துள்ளார்.

# கரிநாள்

அதனடிப்படையில், கிழக்கில் மட்டக்களப்பிலும் வடக்கில், கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

'சுதந்திர தினம் தமிழர்களின் கரிநாள்' எனும் தொனிப் பொருளில் பொலிஸாரின் பல தடைகளைத் தாண்டியும், நீதிமன்ற தடை உத்தரவை மீறியும் மட்டக்களப்பில், பொதுமக்கள் கறுப்புக் கொடி ஏந்தியவாறு கல்லடி செபஸ்டியன் தேவாலயத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (04) ஈடுபட்டனர்.

கிழக்கில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்திபூங்காவரையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். இதற்கு வலிந்து காணாமல் போன உறவுகளின் சங்கங்கள் மற்றும் சில அரசியல் கட்சிகள் ஆதரவு வழங்குவதாக அறிவித்தன.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பொலிஸார் தடைவிதித்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் இருவர் உட்பட 17 பேருக்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவு பெற்று இரவோடு இரவாக வீடுவீடாக வழங்கினர்.

அதேவேளை? மட்டக்களப்பு நகரில் உள்ள முக்கியச் சந்திகளில் துப்பாக்கியுடன் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டதுடன் கல்லடி பாலம் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் கொழும்பில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த கலகமடக்கும் பொலிஸார் தண்ணீர் வீசும் பவுசருடன் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேவேளை, திருகோணமலையில் இருந்தும் அம்பாறையில் இருந்து ஆர்ப்பாட்டத்திற்கு பஸ் வண்டிகளில் வந்தவர்களை வாகரை மற்றும் கல்லாறு பகுதிகளில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் அந்த பஸ் வண்டிகளை நிறுத்தி பொலிஸார் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இந்த நிலையில், கொட்டும் மழைக்கு மத்தியில், காணாமல் போன உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான வடகிழக்கு தலைவர் வேலன் சுவாமி , வடகிழக்கு முன்னேற்றச் சங்கத் தலைவர் த.லவகுமார் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கல்லடி செபஸ்தியன் தேவாலயத்தில் காலை 10 மணிக்கு ஒன்று திரண்டனர்.

அங்கிருந்து காந்தி பூங்கா வரையில் ஆர்ப்பாட்டமாகச் செல்ல பொலிஸார், தடைவிதித்ததையடுத்து தேவாலயத்துக்கு முன்பாக உள்ள வீதியில் கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு காணாமல் போன உறவுகளின் உருவப்படங்கள் ஏந்தியவாறு தலையில் கறுப்பு துண்டுகளைக் கட்டியவாறு "தமிழர்களின் நிலத்திலிருந்து இராணுவத்தினர் வெளியேறு", "சுயநிர்ணயத்துடன் வாழ வழி செய்", "காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்குச் சர்வதேச நீதி நிலைநாட்டு" என்ற கோஷங்களுடன் பகல் 12 மணிவரை ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இந்நிலையில், சுதந்திர தினத்தை 'கறுப்பு நாள்' என்று கூறி கிளிநொச்சி இரணைமடுவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வடக்கின் அரசியல் தலைவர்கள் குழுவைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது அத்துமீறி நடந்து கொண்டதற்காக ஐந்து பல்கலைக்கழக மாணவர்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டனர்.

ஊடக சுதந்திரம், பேச்சு சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்றுவது போன்ற பல்வேறு காரணங்களால் நாட்டில் சுதந்திர தினத்தைக் கொண்டாடச் சரியான சூழ்நிலை இல்லை என போராட்டக்காரர்கள் கூறினர்.

இந்தப் போராட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீதரன், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சிவில் ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.

(கனகராசா சரவணன், வா.கிருஸ்ணா, நிதர்ஷன் வினோத், வ.சக்தி)

# தமிழர் தேசத்தின் கரிநாள்

சண்முகம் தவசீலன்

இலங்கையின் சுதந்திர நாள் தமிழர் தேசத்தின் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏழு முக்கிய விடயங்களை முன்வைத்து பெப்ரவரி (04) முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜனின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

"வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நீதி வேண்டும்", "தமிழ் இனப்படுகொலைக்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணை தேவை", "தமிழ் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படுதல் வேண்டும்", "பயங்கரவாதத் தடைச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்", "தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பு உடனடியாக நிறுத்தப்படவேண்டும்", "தமிழர் தாயகத்திலுள்ள வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளை அழிக்காதே", "இறைமை, சுயநிர்ணயம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி தீர்வு வேண்டும்" உள்ளிட்ட ஏழு விடயங்கள் இவ்வார்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரிலான மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ் தரப்புடன் இணைந்து தயாரித்த புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்பு வரைபைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முற்றாக நிராகரிப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் "அரசியல் கைதிகளின் விடுதலை","காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி", "தமிழின அழிப்பிற்கான நீதி", "நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படுதல் உள்ளிட்ட விடயங்களை வலியுறுத்தி கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தாலி கொடி மோசடி; யுவதி கைது



எம்.றொசாந்த்

வாய் பேச முடியாத பெண்ணொருவரிடமிருந்து 21 பவுண் தாலிக்கொடியை இரவலாகப்பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் வாய் பேசமுடியாத பெண்ணொருவரிடம், அயலவரான யுவதி ஒருவர் விசேட நிகழ்வுகளுக்குச் செல்லும்போது, தாலிக்கொடியை இரவலாகப்பெற்று அணிந்து சென்று, பின்னர் அதனை மீள அப்பெண்ணிடம் கையளிப்பதனை வழமையாகக் கொண்டிருந்துள்ளார்.

இவ்வாறு அண்மையில் வழமைபோல், தாலிக்கொடியை இரவலாகப்பெற்று சென்ற யுவதி, தாலிக்கொடியை திருப்பி கொடுத்தபோது, கொடியின் அமைப்பில் வித்தியாசத்தை உணர்ந்த பெண், அதனை நகைக் கடை ஒன்றுக்குக் கொடுத்து சோதித்தபோது, அது போலியானது என தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் குறித்த பெண் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்பேரில் தாலிக்கொடியை வாங்கி சென்ற யுவதியை கைது செய்த பொலிஸார், அவரிடம் விசாரணைகளை முன்னெடுத்தபோது, சுன்னாகம் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் இரவலாகப்பெற்ற தாலிக்கொடியை விற்பனைசெய்து, அதேபோன்று போலி தாலிக்கொடியை அப்பெண்ணிடம் கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். குறித்த யுவதியை தடுப்பு காவலில் வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



## ஆர்ப்பாட்டத்துக்கு சென்றவர்களை திருப்பி அனுப்பிய பொலிஸார்

அப்துல்சலாம் யாசீம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினரால் கல்லடியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காக திருகோணமலையில் இருந்து பேருந்து ஒன்றில் சென்றவர்களை ஞாயிற்றுக்கிழமை (04) வெருகல் பாலத்தில் வைத்து தடுத்து வைத்து, பொலிஸாரினால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், ஆர்ப்பாட்டத்திற்காகக் கொண்டுச் சென்ற பதாகைகளும் ஏனைய பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

நீண்ட நேர வாக்குவாதத்தின் பின்னர் குறித்த பேருந்து மீண்டும் திருகோணமலைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக 43 பெண்கள் 10 ஆண்கள் பயணித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



## INS Karanj





இந்திய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் INS Karanj, இரண்டு நாள் பயணமாக 2024 பெப்ரவரி 03 அன்று கொழும்பு வந்தடைந்தது. நீர்மூழ்கிக் கப்பலை இலங்கை கடற்படையின் பாதுகாப்பு அதிகாரி சம்பிரதாய முறைப்படி வரவேற்றார்.



## திடீர் சோதனை நடவடிக்கை

பி.கேதீஸ்

நாடு முழுவதும் அமுல்படுத்தப்படும் சட்ட நடவடிக்கையுடன் இணைந்து நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு அருகில் உள்ள அனைத்து கடைகளையும் கடுமையாக சோதனையிடுவதற்கு நுவரெலியா பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும் முன்னர் போதைப்பொருள்களின் அச்சுறுத்தலில் இருந்து பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் நோக்கில் இந்த விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நுவரெலியா பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மான மற்றும் பிரதி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜயசுந்தர ஆகியோரின் வழிகாட்டலின் கீழ், பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் ஹெட்டியாராச்சியின் பணிப்புரைக்கமைய நுவரெலியா பொலிஸார் இந்த விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

## இத்தாலி துப்பாகியுடன் இளைஞன் கைது

துசித குமார டி சில்வா

பெந்தோட்ட- வராஹேன பிரதேசத்தில், 17 வயதான இளைஞனிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட வகை கைத்துப்பாக்கி மற்றும் 5,580 மில்லிகாரம் ஹெரோய்ன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட துப்பாக்கி ஏதேனும் குற்றச் சம்பவத்துடன் தொடர்புடையதா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சனிக்கிழமை (3) பிற்பகல் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பெந்தோட்டை- அங்கொட பகுதியைச் சேர்ந்வர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை பலபிட்டிய நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தி மேலதிக விசாரணைகளுக்காக ஏழு நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கவுள்ளதாக பெந்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஷாரகரி தெரிவித்துள்ளனர்.



## விசேட கலந்துரையாடல்

06) எம்.எஸ்.எம்.நூர்தீன்

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ சந்திரகாந்தன் வெள்ளிக்கிழமை (02) மட்டக்களப்பு மாவட்ட விவசாய சம்மேளன உறுப்பினர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இந்த கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, விவசாய அமைப்பினர் நெல்லிற்கான உத்தரவாத விலை இன்மையினால் தாம் பாதிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டியதுடன், விவசாய நடவடிக்கை மேற்கொள்ளும்போது போக்குவரத்துக்கான வீதிகளை தரமுயர்த்தி தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.



மேலும் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய பயிர்ச் செய்கைகளுக்குரிய நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆவணம் செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், பின்தங்கிய பிரதேசமான மண்முனை மேற்கு நரிப்புள் தோட்டத்தில் இருந்து இலுப்படிச்சேனை வரை புதிய பாலம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் என்.நாகரெத்தினம் மற்றும் உயர் அதிகாரிகள் விவசாய அமைப்பினர் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## “தொலைபேசி பாவனையை குறையுங்கள்”

ஒரு பாடத்திற்கு நான்கு இடங்களில் டியூஷன் செல்வதால் எந்த பிரயோசனமும் இல்லை என்றும் சுயகற்றல் (self learning) ஒன்றே முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும் எனவும் கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

ரக்ஸ் மற்றும் அஸ்கோ அமைப்பின் செயலாளர் ச.நந்தகுமார் தலைமையில், வருடாந்த கல்விச் சாதனையாளர் கௌரவிப்பு விழா காரைதீவு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் சனிக்கிழமை (03) நடைபெற்றுள்ளது. இவ்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“உயர்தரம் கற்கும் காலத்தில் ஒரு நாளைக்கு நான்கு மணித்தியாலங்கள் கட்டாயம் சுயகற்றலில் ஈடுபடவேண்டும்.

சுயகற்றல் ஒன்றே வெற்றியைத் தரும். குறிப்பாக ஆசிரியர் கைநூலை படியுங்கள். அதிலுள்ள விடைகளைத்தவிர வேறொன்றுமில்லை.

காரைதீவில் இம்முறை 37 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்கின்றார்கள்.




இங்கு பாராட்டு விழா சிறப்பாக நடைபெறுகிது. அடுத்தமுறை இந்த எண்ணிக்கை ஐம்பதாக வேண்டும்.

முடியுமானவரை தொலைபேசி பாவனையை குறையுங்கள். அப்பொழுது முன்னேறலாம்” என தெரிவித்துள்ளார்.

மேலும், இங்கு மூன்று ஏ பெற்ற ஐந்து மாணவர்களுக்கு தலா ஒரு இலட்ச ரூபாய் பரிசும் அடுத்த கட்ட பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் ஏனையோருக்கு பதக்கமும் வழங்கி கௌரவிப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொள்ளையடித்துச் சென்ற இருவர் சிக்கினர்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம்-நெல்லியடி பகுதியில் வீடொன்றில் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய இருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

39 மற்றும் 27 வயதான இருவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகக் கடந்த வருடம் கிடைக்கப்பட்ட தகவலுக்கமைய, காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தொடர் விசாரணைக்கமையவே குறித்த கைது நடவடிக்கையை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரை நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




SALE OF REGISTERED VEHICLE

| DESCRIPTION | YOM | YARD |
|---|---|---|
| NISSAN DAA-HT32 X-TRAIL SP CAO-XXXX (Damage Vehicle) | 2015 | NO. 375/21/A Makumbura, Pannipitiya |

Vehicle inspection daily from 10.00 AM to 2.00 PM

Offers are called for the sale of the above vehicle from 05th of February 2024 to 8th of February 2024 till 2.00 pm.
Offer forms are available on non-Refundable payment of Rs. 300/- at
135, Galle Road, Wellawatte, Colombo-6.
Management reserves the right to cancel or withdraw any offers made in respect of above.

Inspection on prior appointment
Tel: 0114-343130, 0768371340, 0778936453

# 76ஆவது சுதந்திர தினமும் கரிநாளும் அனுஷ்டிப்பு

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம், முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில், கொழும்பு, காலி முகத்திடலில் நடைபெற்றது. அதில், பிரதம அதிதியாக தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்து கொண்டிருந்தார்.

இலங்கை ஒரே நாடு என்றாலும் தமிழர்களின் பூர்வீக தாயகமான வடக்கு, கிழக்கில் சுதந்திர தினம் கரிநாளாகவே அனுஷ்டிக்கப்பட்டது. இவ்விரு மாகாணங்களிலும் அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தின நிகழ்வுகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கை சுதந்திரம் பெற்றது என்பதற்கு அப்பால், தமிழர்களின் தேசம், பௌத்த-சிங்களவர்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டது. அன்றிலிருந்து இன்று வரையிலும் சகல உரிமைகளும் மறுக்கப்பட்டு, அபகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

நில உரிமை முதல், கலாசார உரிமை வரையிலும் தமிழர்களுக்கான உரிமைகள் அனைத்தும், மிக அப்பட்டமான முறையில் அபகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. 2009இல் இறுதி யுத்தத்துக்குப் பின்னர், தென்னிலங்கையின் ஓர் அடிமை தேசமாகவே வடக்கு, கிழக்கு கையாளப்படுகின்றது.

பொதுவாகக்கூறுவதாயின், வடக்கு, கிழக்கு ஒரு சட்டம், தென்னிலங்கைக்கு ஒரு சட்டம் கையாளப்படுகின்றது. உதாரணமாகத் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியைக் குறிப்பிடலாம். வடக்கு, கிழக்கில் பௌத்தத்தை முழு வீச்சில் பரப்புவதற்கான செயற்பாடுகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வாறான நிலையில், தமிழர்களுக்கு இந்நாள் (பெப்ரவரி 4) சுதந்திர தினமாக இருக்கமுடியும்.

கொழும்பு-காலி முகத்திடலில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது என மார்த்தட்டிக்கொள்ளக் கூடாது. சிங்கள, தமிழ் மொழிகளில் தேசிய கீதத்தை இசைத்த மாணாக்கர் குழுவில், தமிழ், சிங்க மற்றும் முஸ்லிம் மாணவர்களும் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

எனினும், தமிழ் மொழியில் தேசிய கீதம், உரிய சொற்பதங்களுடன், உணர்வுப்பூர்வமாக பாடப்படவில்லை. என்பதை அறிந்துகொள்ளவேண்டுமாயின், தமிழில் தேசிய கீதம் பாடப்பட்ட விதத்தை மீண்டும் ஒருமுறை கேட்டுப்பாருங்கள்.

கடந்த காலங்களிலும் சுதந்திர தினம், வடக்கு, கிழக்கில் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டது. தென்னிலங்கையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சுதந்திர தினத்துக்கு இரண்டொரு நாட்களுக்கு முன்னரே, அரசாங்க திணைக்களங்கள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டன.

இம்முறை அங்கொன்றும் இங்கொன்றுமாக பறந்துகொண்டிருந்தன. மக்கள் தேசிய சுதந்திர தினத்தைக் கொண்டாடும் மனோநிலையில் இல்லை. தேசியக் கொடிகளை வாங்கி, வீடுகளில் கட்டுவதற்குக் கூட அவர்களிடத்தில் பணமில்லை என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, சிங்கள,தமிழ் மற்றும் முஸ்லிம்கள் ஓரணியில் நின்று, போராடிப் பெற்றுக்கொண்ட சுதந்திர தினத்தை, மற்றுமோர் இனம் அல்லது ஏனைய இனங்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதற்காகப் பயன்படுத்துவது நியாயமானது அல்ல என்பதை நினைவூட்டுகின்றோம்.

அதுமட்டுமன்றி, தமிழர்கள் தங்களுடைய தாயகமான வடக்கு, கிழக்கில், சுதந்திர தினத்தை ஏன்? கரிநாளாக அனுஷ்டிக்கின்றனர் என்பதை தேடியறிந்து அவற்றுக்கு விடைக்கான முயற்சிக்க வேண்டும். இல்லையேல், தமிழ்களின் தாயகத்தில் பெப்ரவரி 4, கரிநாளாகவே இருக்கும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# தமிழர்கள் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா?

**லக்ஸ்மன்**

உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில்தான் இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் நேற்றைய தினம் (04.02.2024) விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. ஆனால், தமிழர்கள் தங்களது சுதந்திரத்தினை முழுமையாக அனுபவிக்கவில்லை என்றே உணர்வதுடன் கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றனர். இதற்கு பல காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

கி.பி 1505இல் போர்த்துக்கேயரினால் இலங்கையின் கரையோர பிரதேசம் கைப்பற்றப்பட்டது. கி.பி 1602இல் ஒல்லாந்தரின் ஏகாதிபத்தியத்துக்குள் நாடு சென்றது. பின்னர் கி.பி 1766இல் பிரித்தானியரின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டு 1815இல் முழு இலங்கையும் ஆங்கிலேயரின் நிருவாகத்திற்குள் கொண்டுவரப்பட்டது.

1818இல் மலையக பெருங்கலகம், 1823இல் கொஸ்வத்தை கிளர்ச்சி, 1826இல் பிம்தென்னே கிளர்ச்சி, 1835இல் மல்வத்து விகாரையின் கிளர்ச்சி, 1848இல் மாத்தளை பெருங்கிளர்ச்சி போன்றன நடைபெற்றன.

1818இல் நடைபெற்ற கிளர்ச்சியானது ஆங்கிலேயரின் நிர்வாகத்தில் சிறு குழப்பத்தினை ஏற்படுத்தியிருந்து.

அதன் வழியாக 1831இல் அரசாங்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் கோல்புறுக் ஆணைக்குழு நிறுவப்பட்டு ஆட்சி முறை மறுசீரமைப்பு ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டது. அதனை வெற்றி என்று சொல்லமுடியாதிருந்தது. அதன் பின்னர் கொண்டுவரப்பட்ட சோல்பரி போன்ற சீர்திருத்தங்களும் இலங்கையில் சரியானதொரு முடிவினை ஏற்படுத்தவில்லை. அதன் பின்னரான போராட்டங்கள், கிளர்ச்சிகள் பிரித்தானியரின் ஏகாதிபத்தியத்தினை இல்லாமலாக்கவில்லை. ஆனால், இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டதையடுத்து பிரித்தானிய அரசு 1948 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கைக்குச் சுதந்திரத்தினை வழங்கியது.

1948இல் சுதந்திரமடைந்த பின்னர் அப்போதிருந்த அரசியலமைப்பு இரத்துச் செய்யப்பட்டு இரண்டு அரசியல் யாப்புகள் மூலம் நாடு முன்னெடுக்கப்பட்டது. முதலாவது 1972ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட மக்கள் குடியரசு யாப்பாகும். அத்தோடு இரண்டாவது 1978ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பாகும். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு இதுவரையில் 20 திருத்தங்களைக் கண்டிருக்கிறது.

அந்த வகையில், இலங்கையின் சுதந்திரத்துக்காகத் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் என அனைவரும் பாடுபட்டிருந்தனர். இதில் தமிழர்களின் பங்கு முக்கியமானதாகும். இந்த முக்கியத்துவம் சுதந்திரத்துக்குப் பின்னர் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்டதாக மாறி தமிழர்கள் மீதான அடக்குமுறையாக மாற்றம் பெற்றது. அதன் காரணமாகவே அரசுக்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கியிருந்தன. அஹிம்சை, அறவழிப் போராட்டங்களில் ஆரம்பித்து ஆயுதப் போராட்டம் வரை சென்றிருந்தது.

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டமானது வடக்கு கிழக்கு மக்களுக்கான இன விடுதலைக்கான போராட்டமாகவே காணப்பட்டது. இப்போராட்டத்தின் ஆரம்பம் முதல் இன்றுவரை எந்த ஒரு அரச தலைவரும் மனசாட்சியுடன் அதனை ஏற்றுக் கொண்டதில்லை. ஏதோ ஒரு வகையில் காலங்கடத்தும் வகையிலும், அடக்குமுறையின் மூலமும் அதனை இல்லாதொழிக்கவே முயன்று வந்திருக்கின்றனர். பிரச்சினை ஒன்று இருப்பதனையே மறுக்கின்றனர் என்பதே தமிழர்களின் குற்றச்சாட்டு.

தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக வடக்கு கிழக்கில் உருவாகிய விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு இந்தியா பயிற்சி, உதவி வழங்கி, ஆதரவளித்து அவர்களை ஊக்கப்படுத்தி பின்னர் ஒரு நிலைமையில் ஒதுங்கிக் கொண்டது. திம்பு பேச்சுவார்த்தை, பின் இலங்கை இந்திய ஒப்பந்தம் என இந்தியா உள்நுழைந்தே இருந்தது. இருந்தாலும், இந்திய அமைதிப்படை நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் இலங்கை அரசின் உள்விவகாரம் என்ற நிலைப்பாட்டுடன் நின்று போனது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் உருவான 13ஆவது திருத்தமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாத நிலையில் இப்போதும் தமிழர்கள் 13ஐ நடைமுறைப்படுத்துங்கள் என்ற கோரிக்கையுடனேயே இருந்து வருகின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் பிரிக்கப்பட்டாலும் முழு அதிகாரத்துடன் இயங்கக் கூடியதாக இல்லை. தேர்தல்கள் சரியான முறையில் நடத்தப்படவில்லை. மக்கள் அதிகாரம் அற்றதாக ஆளுநர்களின் ஆதிக்கத்திலேயே மாகாண சபைகள் இயங்குகின்றன. இது ஜனநாயக நடைமுறைக்கு முரணானது என்பது மக்களின் குற்றச்சாட்டு.

தமிழ் மக்களுடைய அரசியல், இன விடுதலைப் போராட்டம் தொடர்பான நிலைப்பாடு ஒன்றாக இருந்தாலும் காலத்துக்குக் காலம் அரசாங்கங்களினால் பலவாறாகக் கையாளப்பட்டே வந்திருக்கிறது. அதேபோன்று, இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளும் தம்முடைய நலனை மாத்திரமே கருத்தில் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதில் மாற்றங்கள் ஏற்படவில்லை என்பதே உண்மையாகும்.

நாட்டில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம் முள்ளிவாய்க்கால் அழிவுடன் 2009 மே மாதத்துடன் நின்று போனது. அதன் பின்னர் தமிழர்கள் கோரிவருகின்ற நீதி இன்னமும் கிடைக்கவில்லை. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் சபையில் கொண்டுவரப்படுகின்ற தீர்மானங்கள் காலங்கடத்தும் செயற்பாடுகளாக இருக்கின்றன. இன அழிப்பினை இலங்கை அரசு மேற்கொண்டது என்றும் சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாக தமிழர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்ற கோசங்களும், கோரிக்கைகளும் நாளும் பொழுதும் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. நேற்றைய சுதந்திர தின நாளிலும் சுதந்திர தினம் கரிநாள் என்ற அறிவிப்புடன் போராட்டங்கள் தடைகள், தடையுத்தரவுகளின் மத்தியில் நடத்தப்பட்டன.

தமிழர்கள் போராட்டங்களை நடத்துவதற்குக் கூட உரிமையற்றவர்களா என்ற கேள்வி இந்த இடத்தில் தோன்றியிருக்கிறது. கடந்த வருடங்களில் இவ்வாறான போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும் இந்த வருடத்தில் மோசமான நெருக்கடியினை தமிழர்கள் எதிர் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறானால், ஜனாதிபதியாக இருக்கின்ற ரணில் கூட உரிமை மறுப்பாளரா என்றும் கேள்விகள் வெளிவருகின்றன. முழுச் சர்வாதிகாரத்துடன் தமிழர்கள் அடக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகையில் சுதந்திரத்தினை எவ்வாறு அனுபவிக்க முடியும் என்ற வகையிலேயே மனித உரிமைகளுக்கான மதிப்பளிப்பு பற்றியும் பேசப்படுகிறது.

அந்த வகையில், சுதந்திரமடைந்த காலம் முதல் ஆட்சிக்கு வந்த அரசுகள் சிங்கள கொடுந்தேசியவாத சிந்தனையுடன் தமிழ் பேசுவோரின் மொழி உரிமை, நிலவுரிமை, வாக்குரிமை, பிரஜாவுரிமை அடிப்படை உரிமைகள் என அத்தனை உரிமைகளையும் பறித்து அவர்களின் உயிர்வாழும் உரிமைகளைக் கூட அனுபவிக்க முடியாத நிலையில் 76ஆவது சுதந்திரதினத்தைக் கரிநாளாகவே கருதுகின்றோம் எனும் கோசம் வெளிப்பட்டிருக்கிறது.

1978இல் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் உறுப்புரைகள் குறிப்பாக மக்களது அடிப்படை உரிமைகள், சமத்துவம், நீதித்துறைச் சுதந்திரம், சுயாதீனத்தன்மை, சட்டத்தின் முன் யாவரும் சமமான தன்மைகள் இதுவரை முறையாகப் பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டைத் தமிழர்கள் தொடர்ந்தும் முன்வைக்கின்றனர்.

அத்துடன், அரசியலமைப்பை உருவாக்கிய ஆட்சியாளர்களே அரசியலமைப்பை மீறுவதும் அரசியலமைப்பைப் பேணிப் பாதுகாப்பதாக சத்தியப்பிரமாணம் செய்த ஆட்சியாளர்களே அவற்றை மீறுவதும், நீதித்துறையினை நினைத்தபடி வளைப்பதும் நாட்டில் நடைபெறுகின்றபோது, நாட்டில் நல்லிணக்க, சமத்துவத்தும் எவ்வாறு ஏற்படுத்தப்படும் என்பதும் தமிழர்களின் கேள்வி. அந்த ஒழுங்கில்தான் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற விடயமும் கேள்விக்கு வருகிறது.

இன நல்லிணக்கத்தைச் சீர்குலைப்பதற்கும், மத முரண்பாடுகளை ஏற்படுத்துவதற்கும், நில ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கும், காரணமானவர்கள் யார் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்காத, எடுக்க முடியாத நிலை தொடர்கிறது. சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார், இராணுவ உத்தியோகத்தர்களும் தங்கள் தேவைகளுக்கு ஏற்றாற்போல் செயற்படமுனைகின்றனர். இவை தமிழர்களுக்கு எதிரானவைகளாகவே அதிகமாக இருந்துவிடுகின்றன.இந்த இடத்தில் தான் தமிழர்கள் நாட்டில் சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா என்ற கேள்வி தொக்குகிறது.



## வாழ்வியல் தரிசனம்

எங்களை நாங்கள் தான் அமைதிப்படுத்த வேண்டும். எவரையும் நாம் குழப்புதல் ஆகாது. எமது நடத்தைகளால், வார்த்தைகளால் பிறரின் மனம் துன்பப்பட இடமளித்தலாகாது. அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

இத்தகைய கொள்கை நிலையில் வாழ்வது சிரமமானது கிடையாது. தேவையற்ற விமர்சனங்கள், நெஞ்சத்தை நோகடித்தல், பராமுகத்துடன் எவரையும் நிராகரித்தல் போன்ற குணாதிசயங்கள் வெறுக்கத்தக்க செயலாகும். சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல! அதாவது, எங்களது சொல்லாலும் செயலாலும் எவரது மனமும் குழம்பிட வழிவகுத்தலாகாது.

ஒருவர் தனது வாழ்க்கையில் தனக்கான கௌரவம், உரிமை, சுதந்திரம் போன்றவைகளில் அக்கறை கொண்டே இயங்குகின்றார். இந்த நிலையில் அக்கறையுடன் வாழ்பவர், மற்றயவர்களின் மனநிலை பற்றியும் உணரவேண்டும். மனிதன் வெறும் சடப்பொருள் அல்ல, சும்மா இருப்பவர்களைத் தொந்தரவு கொடுத்து விளையாடக்கூடாது. கேலி என்ற பெயரிலான உரையாடல்கள், நையாண்டிகள், சேட்டைகள் விரும்பத்தக்கன அல்ல!

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அறுவடை செய்வதில் நெருக்கடி

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலை செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நிலக்கடலையினை அறுவடை செய்வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கூடுதலாக நிலக்கடலைச் செய்கை மேற்கொள்ளப் படுகின்றது. நிலக்கடலை அறுவடை செய்யும் காலங்களில் நிலம் கூடுதலாக ஈரத்தன்மை உள்ளதாக இருக்கும். தற்போது ஈரத்தன்மை குறைந்திருப்பதன் காரணமாக நீர்ப்பாசனம் மேற்கொண்டே அறுவடை செய்ய வேண்டிய நிலையில் விவசாயிகள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

நிலக்கடலைக்கு அறுவடையின் போது நீர்ப்பாசனம் மேற்கொள்ள முடியாத விவசாயிகள் தூர இடங்களில் இருந்து நீரினை கொண்டு வந்து நிலத்தினை ஈரலிப்பாக்கி நிலக்கடலையை அறுவடை செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

உப உணவுப் பயிர்ச் செய்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலக்கடலைச் செய்கையில் விவசாயிகள் கூடுதலாக ஈடுபட்டுள்ளனர். தற்போது நிலக்கடலை அறுவடை செய்வதில் செய்கையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

–நடராசா கிருஸ்ணகுமார்



SLT–MOBITEL வருடாந்த நிதி அறிக்கைக்கு

# TAGS விருதுகள் 2023 தங்க விருது




ஸ்ரீலங்கா ரெலிகொம் (SLT) வருடாந்த நிதி அறிக்கை 2022க்கு, அண்மையில் நடைபெற்ற TAGS (வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை) விருதுகள் 2023 நிகழ்வில் தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் தொழில்நுட்பத் துறையில் தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க இந்த விருதைப் பெற்றுக் கொண்டதுடன், பிரதம நிதி அதிகாரி சஞ்ஜீவ சமரநாயக்க, சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி மற்றும் SLT-MOBITEL இன் இதர சில சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் (CA ஸ்ரீ லங்கா) எற்பாடு செய்யப்பட்டிருந்த TAGS விருதுகள் அல்லது வருடாந்த நிதி அறிக்கை விருதுகள் என்பது, 56 வருட காலமாக தொடரப்படுகின்றது. பல்தேசிய நிறுவனங்கள் முதல் பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் சிறிய நடுத்தரளவு வியாபார நிறுவனங்கள் வரை நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் போட்டிகரத்தன்மையை ஏற்படுத்துவதற்காக இந்தவிருதுகள் வழங்கும் நிகழ்வு TAGS விருதுகள் என CA ஸ்ரீ லங்காவினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. அதனூடாக நிதிசார் மற்றும் நிதிசார் அறிக்கையிடல் முறையை ஊக்குவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் ஒன்றிணைக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி அறிக்கை 'The Future at our Core' எனும் தலைப்பில் வெளியிடப்ப ட்டிருந்ததுடன், வெளிப்படைத்தன்மை, சிறப்பு மற்றும் பங்காளர்களுடன் சிறந்த தொடர்பாடல் ஆகியவற்றுக்காக நிறுவனம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. பெருமளவு வெளிப்படுத்தல்கள், கட்டமைக்கப்பட்ட விளக்கங்கள், நியமங்களை பின்பற்றல் மற்றும் பிரதான பங்காளர்களை இலக்கு வைத்து தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தொடர்பாடல்கள் போன்றன, தொழிற்துறையில் SLT-MOBITEL இனால் கூட்டாண்மை அறிக்கையிடல், நம்பிக்கையை ஊக்குவித்தல் மற்றும் முதலீட்டாளர்கள், பங்காளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் தொழிற்துறைசார் நியமத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

TAGS 2023இல் SLT-MOBITEL வெற்றி யீட்டியுள்ளமையானது, தொலைத்தொடர்பாடல் பிரிவில் மற்றும் தொழிற்பாட்டு மற்றும் நிதிசார் அவதானம் ஆகியவற்றில் தொடர்ச்சியான தலைமைத்துவத்துக்கான ஆதரவாக அமைந்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

Dialog Innovation Challenge க்கு

# அமோக வரவேற்பு




Dialog Innovation Challenge க்கு நாடளாவிய ரீதியில் இருந்து வந்த 1200இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களால் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. இது இந்த தேசிய முன்னெடுப்பின் மீதுள்ள வலுவான ஈடுப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. இம்முன்னெடுப்பு டிஜிட்டல் மாற்றத்திற்கு வளமூட்டி நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்தை வடிவமைப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கையர்களுக்கும் விடுக்கப்பட்ட இந்த அழைப்பின் மூலம் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் / Startupகள், மற்றும் பொது மக்கள் என வெவ்வேறு வயதுப்பிரிவில் வெவ்வேறு விதமான போட்டியாளர்களுடன் 1279 விண்ணப்பங்களை இந்த சவால் பெற்றுக்கொண்டது. இந்த சவாலானது தொழில்நுட்பம் சார்ந்த தீர்வுகள் மூலம் மக்களின் வாழ்வை மேம்படுத்த ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் அழைப்பு விடுத்தது. டிஜிட்டல் தொழில்நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, machine learning, IoT, blockchain போன்றவற்றை கொண்டு வடிவமைக்கப்பட்ட தீர்வுகள் எந்த நிலையில் இருந்தாலும் அவை வரவேற்கப்பட்டன. பதிவுகள் தற்போது முடிவடைந்துள்ள நிலையில், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை பெப்ரவரி ஆரம்பத்தில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பங்கேற்பாளர்களுக்கு ரூ. 5 மில்லியன் பெறுமதியான பரிசுக்குவியலில் இருந்து பரிசுகளை வெல்லும் வாய்ப்புண்டு. அதேவேளை, தெரிவுசெய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு தமது திட்டங்களை செயற்படுத்த DIF (டயலொக் புத்தாக்குனர் நிதியம்) முதலீட்டு நிதியிலிருந்து 500 மில்லியன் ரூபாய் நிதியை கோர முடிவதுடன் டயலொக்கின் பரந்துபட்ட ஆக்கப்பூர்வ சூழலமைப்பிலிருந்து விலைமதிப்பற்ற பயிற்சிகள் மற்றும் வழிகாட்டல்களை பெறும் வாய்ப்பும் கிட்டும். இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனம் (IESL), National Innovation Agency (NIA), Sri Lanka Inventors Commission (SLIC), இலங்கை சந்தைப்படுத்தல் கற்கை நிலையம் (SLIM), Ceylon Chamber of Commerce (CCC), இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சங்கம் (DMASL), டயலொக் புத்தாக்குனர் நிதியம் (DIF), Lanka Angel Network, Innovation Foundry, மற்றும் Ideamart உட்பட எமது பங்காளர் அமைப்புகளிலிருந்து தொழில்நுட்ப ஜாம்பவான்களும் துறையின் பெருந்தலைமைகளும் பங்கேற்பாளர்களுக்கு குருவாக தமது வழிகட்டல்களை வழங்குவர். இது பங்கேற்பாளர்களை பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைக்கும்.

தற்சமயம் எமது புகழ்பெற்ற நடுவர் குழாத்தினர் ஒவ்வொரு ஒப்படையையும் வெகு உன்னிப்பாக மதிப்பாய்வு செய்து மிகக்கடுமையான புள்ளித்திட்டம் மூலம் அவற்றை மதிப்பிட்ட வண்ணம் உள்ளனர். இதன் வழியாக எந்தவொரு அற்புதமான யோசனையும் கவனிக்கப்படாமல் போவதை தடுக்க முடியும். வெட்டுப்புள்ளியை விஞ்சும் ஒப்படைகளுக்கு தமது ஆக்கபூர்வமான தீர்வுகளை பற்றி ஒரு 5 நிமிட காணொளியில் (video) விளக்கமாக எடுத்துக்கூற அழைப்பு விடுக்கப்படும். நடுவர்கள் இந்த காட்சிப்படுத்தலை கூர்ந்து ஆராய்ந்து முதல் 25 பங்கேற்பாளர்களை அடுத்த கட்டத்துக்கு தெரிவு செய்வர். தெரிவு செய்யபட்ட இந்த குழாத்துக்கு அவர்களது தீர்வுகளை தொழில்நுட்பம் மற்றும் வணிக ரீதியில் நன்கு பட்டை தீட்டி அரையிறுதியில் வெற்றி பெறுவதற்கு தேவையானளவு வழிகாட்டல் திட்டம் மூலம் பயிற்சி வழங்கப்படும்.

# சுதந்திர தின நிகழ்வுகளில் சில...

இலங்கையின் 76ஆவது சுதந்திர தினம் ஞாயிற்றுக்கிழமை (04) கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, நாட்டின் பல பிரதேசங்களிலும் சுதந்திர நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

'புதிய நாட்டை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தினம் கொண்டாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


அம்பாறையில்...




மட்டக்களப்பில்...


யாழ்ப்பாணத்தில்...




மீரா ஓடையில்....


காத்தான்குடியில்....


போரைத் தீவுப்பற்றில்...


மன்னாரில்....


சாய்ந்தமருதுவில்...


மூதூரில்...


திருகோணமலையில்...




தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில்...


நுவரெலியாவில்...


வவுனியாவில்...



# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!



## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)

**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)

**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**

## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :..........................................
மாகாணம் :....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024
## விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**.........................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**.........................................................................

**மாகாணம் :**.........................................................................

**வீட்டு முகவரி :**.........................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**..........................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**..............................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் .......................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..............................................
அதிபரின் கையொப்பம்














# 76ஆவது சுதந்திர தினம்



நாட்டின் 76ஆவது சுதந்திர தினத்தின் பிரதான வைபவம், முப்படைகளின் தளபதியான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், கொழும்பு – காலி முகத்திடலில், கோலாகலமாக, ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்றது. இந்த பிரதான நிகழ்வுக்கு, தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் பங்கேற்றிருந்தார். இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, ஞாயிற்றுக்கிழமை (04) பிற்பகல் புறப்பட்டுச் சென்றார்.

படங்கள்: குஷான் பத்திராஜ்


























சென்னை

அரசியல் பயணத்துக்கு

# “வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி”

**நாமல், ஜீவன் மற்றும் மனோவும் வாழ்த்து**






நடிகர் விஜய் ‘தமிழக வெற்றி கழகம்’ என்ற கட்சியை ஆரம்பித்துள்ளார். கட்சி ஆரம்பித்த அறிவிப்பை கடந்த 2ஆம் திகதி விஜய் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.

‘தமிழக வெற்றி கழகம்’ என்ற கட்சி ஆரம்பித்துள்ள விஜய்க்கு பொதுமக்கள், ரசிகர்கள், அரசியல் கட்சியினர், திரைத்துறையினர் என பல்வேறு தரப்பினரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், புதிய கட்சி ஆரம்பித்தமைக்கு வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் நன்றி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“தமிழ்நாட்டு மக்களின் பேரன்போடு நான் முன்னெடுத்துள்ள அரசியல் பயணத்திற்கு தங்களது வாழ்த்துகளை தெரிவித்த பெருமதிப்புக்குரிய பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், அன்புக்குரிய திரைத்துறை நண்பர்கள், பாசத்துக்குரிய தமிழக தாய்மார்கள், சகோதர, சகோதரிகள், ஊக்கமளிக்கும் ஊடகவியலாளர்கள், “என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள்" அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளுடன் பணிவான வணக்கங்கள்” என தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் தமிழக வெற்றி கழகத்துக்கு, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஆகியோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.




ஆந்திரா

## கோவிலுக்கு ரூ.9.54 இலட்சம் நன்கொடை வழங்கிய யாசகர்

ஆந்திரா மாநிலம், முத்தியாலம் பாடு மாவட்டம், விஜயவாடாவை சேர்ந்தவர் யாதி ரெட்டி. இவர் விஜயவாடாவில் உள்ள சீரடி சாய்பாபா கோவில் முன்பாக யாசகம் பெற்று வருகிறார்.

இந்நிலையில், யாசகமாக பெற்று சேமித்த ரூ.1 இலட்சத்தை சாய்பாபா கோவில் வளர்ச்சிக்கு நிதியாக கோவில் நிர்வாக தலைவரிடம் வழங்கியுள்ளார்.

இது குறித்து கோவில் நிர்வாக தலைவர் கவுதம் ரெட்டி கூறுகையில், “யாதி ரெட்டி கோவிலுக்கு நன்கொடை வழங்குவது இது முதல் முறை இல்லை. ஏற்கனவே பல தவணைகளில் ரூ.8.54 இலட்சம் நன்கொடையாக வழங்கி உள்ளார். தற்போது வழங்கியுள்ள ரூ.1 லட்சத்துடன் ரூ.9.54 இலட்சம் வழங்கி உள்ளார்” என்றார்.



ஆக்ரா

## ‘உருஸ்’ நிகழ்ச்சிக்கு எதிர்ப்பு

உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ள தாஜ்மகால், முகலாய மன்னர் ஷாஜகான், தனது மனைவி மும்தாஜின் நினைவாகக் கட்டியுள்ளார். இன்று இந்தியாவின் முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகத் தாஜ்மகால் திகழ்ந்து வருகிறது. மன்னர் ஷாஜகானின் நினைவு தினத்தை முன்னிட்டு, தாஜ்மகாலில் ஒவ்வொரு ஆண்டும் 3 நாட்கள் ‘உருஸ்’ என்ற நிகழ்ச்சி அனுஷ்டிக்கப்படுகிறது. அந்த வகையில், தாஜ்மகாலில் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை ‘உருஸ்’ நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

ஷாஜகான் ‘உருஸ்’ ஒருங்கிணைப்பு குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். இதற்காகத் தாஜ்மகாலுக்குள் இலவச அனுமதியும் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், தாஜ்மகாலில் ‘உருஸ்’ நிகழ்ச்சியை நடத்தும் குழுவினருக்கு நிரந்தர தடை விதித்து உத்தரவிட வேண்டும் என்றும், தாஜ்மகாலில் ‘உருஸ்’ நிகழ்ச்சிக்காக வழங்கப்படும் இலவச அனுமதியை இரத்து செய்யக்கோரியும் ‘அகில் பாரத் இந்து மகாசபை’ சார்பில் ஆக்ரா நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நமீபியா



## நமீபியா ஜனாதிபதி காலமானார்

தென்மேற்கு ஆபிரிக்க நாடான நமீபியாவின் ஜனாதிபதி ஹேஜ் கீங்கோப் (வயது 82) ஞாயிற்றுக்கிழமை (04) அதிகாலை காலமானார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அவருக்கு சில நாட்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர், தலைநகர் வின்ட்ஹோக்கில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி ஹேஜ் கீங்கோப், சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாகத் துணை ஜனாதிபதி நங்கோலோ தெரிவித்தார்.

ஹேஜ் கீங்கோப் 2015ஆம் ஆண்டு முதல் முறையாக ஜனாதிபதி ஆனார். தற்போது 2ஆவது முறையாக அப்பதவியை வகித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய நடைமுறைக்கு எதிரான திருமணம்

## இம்ரான் கானுக்கும், மனைவிக்கும் 7 ஆண்டுகள் சிறை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் பல்வேறு ஊழல் வழக்குகளில் கைது செய்யப்பட்டு அடியாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான வழக்குகளின் விசாரணை முடிந்து அவ்வப்போது தீர்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், இஸ்லாமிய நடைமுறைக்கு எதிரான திருமண வழக்கில் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி புஷ்ரா பீவி ஆகியோருக்கு தலா 7 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் சனிக்கிழமை (03) தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கை புஷ்ரா பீவியின் முதல் கணவர் கவார் மனேகா தொடர்ந்திருந்தார். இந்த மனுவில், மறுமணத்திற்கான கட்டாய காத்திருப்பு காலம் என்ற இஸ்லாமிய நடைமுறையை (இத்தாத்) மீறியதாக கூறியிருந்தார். திருமணத்திற்கு முன் சட்டவிரோதமான உறவில் இருப்பது, கல்லால் அடித்துக் கொல்லப்படும் மரண தண்டனைக்குரிய குற்றம் எனவும் அவர் குற்றம்சாட்டியிருந்தார்.

இத்தாலி

## ஓவியத்தினால் பதவி விலகிய அமைச்சர்

இத்தாலியின் பாராளுமன்ற உறுப்பினரும், கலாசார அமைச்சருமான 71 வயதான விட்டோரியொ ஸ்கார்பி (Vittorio Sgarbi) பழைமையான கலைப்பொருட்கள் மற்றும் அரிய ஓவியங்களை வாங்குவதில் ஆர்வம் கொண்டவர்.

இந்த நிலையில், 17ஆம் நூற்றாண்டை சேர்ந்த ருடிலியோ மானெட்டி (Rutilio Manetti) எனும் ஓவியர் வரைந்த “தி கேப்ச்சர் ஆஃப் செயின்ட் பீட்டர்" (The Capture of Saint Peter) எனும் ஓவியம் திருடு போனது. 2021இல் அமைச்சர் ஸ்கார்பி ஏற்பாடு செய்திருந்த ஒரு கண்காட்சியில் அந்த ஓவியம் காட்சிக்கு வைக்கப்பட்டது. 2013இல் காணாமல்போன ஓவியம் போலவே இது இருந்தாலும், இந்த ஓவியத்தின் இடது மேற்புறத்தில் ஒரு மெழுகுவர்த்தி தென்பட்டது.



இந்த ஓவியம் ருடிலியோ மானெட்டியின் “அசல்" ஓவியம் என்றும் 2013இல் களவு போனது “நகல்" என்றும் ஸ்கார்பி கூறி வந்தார்.

ஆனால், 2013இல் களவு போன ஓவியத்தில் கைதேர்ந்த ஓவிய நிபுணர்களை கொண்டு ஸ்கார்பி சில மாற்றங்கள் செய்து புதியதாக காட்டியதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதை தொடர்ந்து எழுந்த விமர்சனங்களின் விளைவாக அமைச்சர் ஸ்கார்பி, தற்போது தனது பதவியை இராஜினாமா செய்தார்.

ஆசியக் கிண்ணத் தொடர்:

# வெளியேற்றப்பட்ட ஜப்பான்



ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்து ஜப்பான் வெளியேற்றப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு நடைபெற்ற ஈரானுடனான காலிறுதிப் போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் தோற்றே தொடரிலிருந்து ஜப்பான் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஈரான் சார்பாக மொஹமட் மொஹெபி, அலிரெஸா ஜஹன்ப்க்ஷ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, ஜப்பான் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹிடெமாஸா மொரிட்டா பெற்றிருந்தார்.

இந்தியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

## இங்கிலாந்துக்கு 399 ஓட்டங்கள் வெற்றியிலக்கு



இந்தியாவுக்கெதிரான 2ஆவது டெஸ்டில் இங்கிலாந்துக்கு 399 ஓட்டங்கள் வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இந்தியா தோற்ற நிலையில், விசாகப்பட்டினத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா யஷஸ்வி ஜைஸ்வாலின் 209 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 396 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், ஜேம்ஸ் அன்டர்சன், ஷொய்ப் பஷிர், றெஹான் அஹ்மட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், டொம் ஹார்ட்லி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, சகல விக்கெட்டுகளையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஸக் குறோலி 76, அணித்தலைவர் பென் ஸ்டோக்ஸ் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் ஜஸ்பிரிட் பும்ரா 6, குல்தீப் யாதவ் 3, அக்ஸர் பட்டேல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இனிங்ஸில் இந்தியா, ஷுப்மன் கில்லின் 104, அக்ஸர் பட்டேலின் 45, இரவிச்சந்திரன் அஷ்வினின் 29, ஷ்ரேயாஸ் ஐயரின் 29 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்று 399 ஓட்டங்களை இங்கிலாந்துக்கு வெற்றியிலக்காக நிர்ணயித்தது. பந்துவீச்சில், டொம் ஹாட்லி 4, றெஹான் அஹ்மட் 3, ஜேம்ஸ் அன்டர்சன் 2, ஷொய்ப் பஷிர் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.



தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

## முன்னிலையில் நியூசிலாந்து

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், மௌன்ட் மகட்டரேயில் நேற்று ஆரம்பித்த முதலாவது டெஸ்டின் முதல் நாள் முடிவில் நியூசிலாந்து முன்னிலையில் காணப்படுகின்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

நியூசிலாந்து: 258/2 (துடுப்பாட்டம்: றஷின் றவீந்திர ஆ.இ 118, கேன் வில்லியம்சன் ஆ.இ 112 ஓட்டங்கள். பந்துவீச்சு: டேன் பற்றர்சன் 1/59. டெஷெபோ மொரெகி 1/81)

ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒற்றை டெஸ்டில்

## 439 ஓட்டங்களைப் பெற்ற இலங்கை

ஆப்கானிஸ்தானுக்கெதிரான ஒற்றை டெஸ்ட் போட்டியில் தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 439 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் இலங்கை பெற்றுள்ளது.


இலங்கை சார்பாக அஞ்சலோ மத்தியூஸ் 141, தினேஷ் சந்திமால் 107, திமுத் கருணாரத்ன 77, நிஷான் மதுஷ்க 37, சதீர சமரவிக்கிரம 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் நவீட் ஸட்ரான் 4, நுஜாட் மசூட், கேய்ஸ் அஹ்மட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரஹ்மத் ஷா 91, நூர் அலி ஸட்ரான் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் விஷ்வ பெர்னாண்டோ 4, அசித பெர்ணாண்டோ, பிரபாத் ஜெயசூரிய ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் டொட்டென்ஹாம் எவெர்ற்றன் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், எவெர்ற்றனின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சமப்படுத்தியது.

டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் றிஷலிஷன் பெற்றதோடு, எவெர்ற்றன் சார்பாக ஜக் ஹரிஸன், ஜராட் பிறாத்வைட் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் 51 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் லிவர்பூல் உள்ளது. 46 புள்ளிகளைப் பெற்றுள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் இரண்டாம், மூன்றாம், நான்காமிடங்களில் நடப்புச் சம்பியன்கள் மன்செஸ்டர் சிற்றியும், ஆர்சனலும், அஸ்டன் வில்லாவும் காணப்படுகின்றன. இதில் சிற்றி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளதுடன், வில்லா ஒரு போட்டி அதிகமாக விளையாடியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 05 , பெப்ரவரி 2024, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.